செய்தி வெளியீடு எண்:84 நாள்:04.02.2021

## செய்தி வெளியீடு

## பிப்ரவரி 5–ஆம் நாள் சொற்குவை மாணவத்தூதுவர் பயிற்சி நிறைவு விழா

# தமிழ்வளர்ச்சித்துறை அமைச்சர் பங்கேற்பு!

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் சார்பில் நடைபெற்றுவரும் சொற்குவை மாணவத் தூதுவர் பயிற்சியின் நிறைவு விழா 05.02.2021 வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணியளவில், சென்னை கடற்கரை காமராசர் சாலையிலுள்ள விலிங்டன் சீமாட்டி கல்வியியல் மேம்பாட்டு நிறுவனக் கலையரங்கில் நடைபெறவுள்ளது.

சென்னை மண்டிலத்திற்குட்பட்ட 20 கல்லூரிகளிலிருந்து இளங்கலை முதல் ஆய்வியல் வரை பயிலும் 200 மாணவ–மாணவிகள் தெரிவு செய்யப்பட்டு, 50 பேர்கொண்ட 4 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, ஒரு குழுவிற்கு ஒரு நாள் என்ற வகையில் 02.02.2021 முதல் 05.02.2021 வரை மொத்தம் நான்கு நாள்கள் சொல்லாக்கம், மொழியியல், கணினித்தமிழ், மொழிபெயர்ப்பு, இலக்கணம் ஆகிய தலைப்புகளில் பயிற்சியளிக்கபடுகிறது.

05.02.2021 வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெறவுள்ள இந்தப் பயிற்சியின் நிறைவு விழாவில், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழர் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் திரு. க. பாண்டியராசன் அவர்கள் பங்கேற்று, பயிற்சி பெற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கிச் சிறப்புரையாற்றுகிறார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன் அவர்கள் வாழ்த்துரை வழங்குகிறார்.

அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் இயக்குநர் திரு. தங்க. காமராசு அவர்கள் வரவேற்புரை நிகழ்த்த, விலிங்டன் சீமாட்டி கல்வியியல் மேம்பாட்டு நிறுவனத்தின் முதல்வர் முனைவர் ம. ச. தில்லைநாயகி அவர்கள் நன்றியுரை கூறவுள்ளார்.

இயக்குநர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**